சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **61 / 2022**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **எ.ம.சா.4**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.ரூபி அனிதா அவர்களால் 44/1969 பிரிவின்படி **16.07.2026** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : சரவணன் | கிராமம் : |
| த/பெ : | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் தற்பொழுது குளித்தலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் குளித்தலை காவல் நிலைய குற்ற எண். 53/2022 வழக்கின் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி 19.01.2022 அன்று இரவு 8.30 மணியளவில் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி வழக்கானது 20.01.2022 காலை 9.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்து நடந்த சாலை மங்கம்மா சாலை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் விபத்து இறந்துபோன மோகன்ராஜ் நின்றுக்கொண்டிருந்த நெல் அறுக்கும் இயந்திரத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இறந்துபோன மோகன்ராஜ் என்பவருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் ஆய்வின் பொழுது இல்லை. மேற்படி இருசக்கர வாகன ஓட்டியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. குற்ற இறுதி அறிக்கையானது இருசக்கர வாகன ஓட்டியின் மீது பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நெல் அறுக்கும் இயந்திரத்தின் ஓட்டியின் மீது தான் இறுதி அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. இறுதி அறிக்கையில் நெல் அறுக்கும் இயந்திரத்தை வெளிச்சம் இல்லாமலும், முன் எச்சரிக்கை தடுப்பு வைக்காமலும் நிறுத்தி இருந்ததாகவும், அதன் மீது இருசக்கர வாகன ஓட்டி மோதி விபத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

நெல் அறுக்கும் இயந்திரத்தின் வாகன ஓட்டியின் மீது தான் முதல் தகவல் அறிக்கையும், இறுதி அறிக்கையும் பதிவு செய்யப்பட்டள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகன ஓட்டியின் மீது நீதித்துறை நடுவர் எண்.2-யில் வழக்கு நிலுவையில் இருந்துவருகிறது என்றால் மேற்படி வழக்கானது கடந்த 03.02.2025ம் தேதி எதிரியை

குற்றவாளி இல்லை என விடுதலை செய்யப்பட்டுள்ளார். மேற்படி நெல் அறுக்கும் இயந்திரத்தை சாலையில் இயக்கக்கூடாது என்றாலும், அதனை மற்றொரு வாகனத்தில் ஏற்றிதான் கொண்டு செல்லவேண்டும் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை - இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.07.16 16:15:48 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.